**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்**

**சட்டக் கற்கைகள் திணைக்களம்**

**சட்டமாணிப் பட்டப் படிப்புத் திட்டம் - மட்டம் 6**

**இரண்டாவது தொடர் மதிப்பீட்டுப் பரீட்சை II- 2021/2022**

**LLU6813 - சட்டவியல்**

**காலம்: ஒரு (01) மணித்தியாலம்**

**திகதி: 14.09.2022** **நேரம்: பி.ப. 01.30 - பி.ப 02.30**

**மொத்த வினாக்களின் எண்ணிக்கை: இரண்டு (02)**

**தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்**

**பின்வரும் நிகழ்வை வாசித்து வினா இல. 1 அல்லது 2 இற்கு விடையளிக்க.**

ஜீதோப்பியா ஆனது ஒரு அபிவிருத்தியடைந்துவரும் நாடு ஆகும். ஜீதோப்பியாவின் புள்ளிவிபரச் செயலகத்தின் பிரகாரம், 2021 இன் டிசம்பர் இல் நாட்டின் சனத்தொகையானது இருபது மில்லியன் ஆகும். ஜீதோப்பியாவின் சனத்தொகையின் 30 வீதமானவர்கள் 65 வயதுள்ளோரும் அதனினும் வயதானோரும் ஆவர். இந்நாடு உலகின் "வயதானவர்களைக்" கொண்ட நாடு எனக் கருதப்படுகிறது. ஜீதோப்பியாவில் உலகின் குறைந்த கருவள வீதமும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. குறைந்துவரும் சனத்தொகை விருத்தியும், அதிகரித்துவரும் வயதானோர் சனத்தொகையும் ஜீதோப்பியாவில் பிரச்சினை ஒன்றை உருவாக்கியுள்ளது. சில மாதங்களிற்கு முன்னர் ஜீதோப்பியாவின் பாராளுமன்றம் ஆனது "ஜீதோப்பியாவின் பெண் கடவுள்" என்று அழைக்கப்படும் புதிய கொள்கை ஒன்றை நாட்டின் பிறப்பு வீதத்தை உயர்த்தும் பொருட்டு உருவாக்கியது. இக்கொள்கைக்கு அமைய, மூன்று பிள்ளைகளைக் கொண்ட பெண் ஒருவர் "ஜீதோப்பியாவின் பெண் கடவுள்" ஒருவராக கௌரவிக்கப்படுகிறார். இக் கொள்கையானது பிறப்பில் இருந்து நான்கு வயது வரையான எல்லாக் குழந்தைகளுக்கும் பொருளாதார உதவியை வழங்குவதற்காக "குழந்தை வெகுமதி நிதி" ஒன்றையும் நிறுவியது.

அண்மையில் ஜீதோப்பியாவின் பாராளுமன்றமானது 65 வயதுடையோர் மற்றும் அதனினும் மேற்பட்டோரின் சனத்தொகை விருத்திக்கு பதிலளிக்கும் வகையில் "முதியோர் பாதுகாப்பு சட்டத்தை" முன்மொழிந்தது. இச் சட்டம் ஆனது பிராந்தியத்தின் அதிக நன்மை அளிப்பதும், விரிவானதுமான சுகாதார காப்புறுதி முறைகளுள் ஒன்றாகக் கருதப்படும் "விரிவான நீண்டகால பராமரிப்பு காப்புறுதி" ஒன்றை அறிமுகப்படுத்தியது. இக்காப்புறுதியானது உதவிப் பராமரிப்பு வசதிகளுடன் வசித்தல் மற்றும் வீட்டுப் பராமரிப்பு மற்றும் மளிகைப் பொருள் கொள்வனவிற்கான உதவி முதலான பல்வேறு பராமரிப்பு வசதிகளை வயதுமுதிர்ந்தோருக்கு வழங்கும் பொருட்டு அரச

அங்கீகாரம் பெற்ற பராமரிப்பு திட்டங்களுக்கு பணவசதி அளிக்க திட்டமிட்டுள்ளது. சனத்தொகை மாற்றத்தின் மீதான அரசாங்கத்தின் முதியோர் பாதுகாப்பு சட்டம் மற்றும் விரிவான நீண்டகால பராமரிப்பு காப்புறுதி என்பன விருத்தி அடைந்துவரும் நாடான ஜீதோப்பியாவின் மீது ஏற்படுத்தியுள்ள பொருளாதார சுமையைச் சுட்டிக்காட்டும் பொருளாதார வல்லுனர்களால் கடுமையாக விமர்சிக்கப்படுகிறது. இவர்கள் இக்கொள்கையின் நிறைவேற்றம் ஜீதோப்பியாவின் சமகால உழைக்கும் மக்கள்தொகை மீது எதிர்மறையான பொருளாதார தாக்கத்தை ஏற்படுத்தலாம் என சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ் விமர்சனத்திற்கு பதிலளிக்கும் வகையில் ஜீதோப்பியாவின் அரசாங்கமானது தம்து முயற்சிகள் தமது நாட்டைப் போன்று சனத்தொகையில் மாற்றத்தைக் கண்டுள்ள அபிவிருத்தி அடைந்துவரும் நாடு ஒன்றான ஜீஜீஸ் இனால் மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு சமமானவை என்றுரைக்கிறது. ஜீதோப்பியா, முந்தைய அரசாங்கங்களும் சனத்தொகை மாற்றங்கள் மீது, கருத்தரிப்பு காலத்தில் கர்ப்பணிகளுக்கான பொருளாதார உதவி, வயது முதிர்ந்தோருக்கான இலவச போக்குவரத்து மற்றும் அரச வங்கிகளில் வயதுமுதிர்ந்த பிரஜைகளுக்கான உயரிய சேமிப்பு வட்டி வீதங்கள், முதலான இதேபோன்ற கொள்கைகளை நிறைவேற்றியுள்ளது என சுட்டிக்காட்டியது. எவ்வாறாயினும் சில சமூக ஆர்வலர் குழுக்கள் முன்மொழியப்பட்ட கொள்கைகளை ஆதரிப்பதுடன், "மலர்களை வரவேற்றல்" என்று அறியப்பட்ட பெற்றோர்களாக ஆக உள்ளோர் வாழ்வில் வரவிருக்கும் புதிய உயிரை வரவேற்பதை ஆதரிக்கும் வகையில் ஜீதோப்பியாவில் பின்பற்றப்படும் வழக்கம் ஒன்றை எடுத்துக்காட்டினர். மேலும் இவர்கள் ஜீதோப்பியாவின் ஆள்சார் சட்டங்களின் கீழ் வயதான பெற்றோருக்கு வழங்கப்பட்ட கட்டாய பாதுகாப்பையும் எடுத்துக்காட்டினர்.

ஜீதோப்பியாவின் சட்ட ஆய்வாளராக உம்மை நீர் கருதுக. ஜீதோப்பிய அரசாங்கத்தின் சனத் தொகை மாற்றத்தை எடுத்துரைப்பதற்கான முயற்சிகளை பின்வரும் சட்டவியல் கோட்பாடுகளின் பொருத்தமான அடிப்படைக் கொள்கைகள் மற்றும் கருத்தேற்புகள் என்பனவற்றுடன் தொடர்புறுத்தி ஆராய்க.

1. சமூகவியல் சட்டக்கோட்பாடு
2. வரலாற்று சட்டக்கோட்பாடு

*(20 புள்ளிகள்)*

- *பதிப்புரிமை பெற்றது* -